எதுவரை?

அநேக பாடுகளும், உபத்திரவங்களும் தொடர்ந்து நமது வாழ்க்கையில் நிகழும்போது, நாம் பொறுமையிழந்து “எதுவரை” என்று இறைவனிடமே கேள்விகளைக் கேட்கத் தொடங்கிவிடுகிறோம். வியாதிகளுக்கென்று அநேக மருந்துக்கள், மாத்திரைகளைச் எடுத்தும், வியாதி சுகமடையாவிட்டால் வேதனையோடு “எதுவரை” என்று நாம் புலம்புகின்றோம். பல வேளைகளில், நாம் நமது பிள்ளைகளுக்கு ஆலோசனைகளைக் கொடுத்தும் அவர்கள் நம்முடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் “எதுவரைக்கும்” என் வாத்தைகளை பிள்ளைகள் அசட்டை பண்ணுவார்கள் என்று நாம் நம்முடைய மனதிலே அங்கலாய்க்கின்றோம். சமாதானமாகவும், நட்புடனும் வாழ பலரிடம் நாம் முயற்சி செய்தும் அவைகள் பலனளிக்காத பட்சத்தில் எதுவரைக்கும் நான் முயற்சி செய்யவேண்டும் என்று சலிப்படையத் தொடங்கிவிடுகிறோம்.

ஏதோ சிலருடைய வாழ்வில் மாத்திரமல்ல, அநேகருடைய வாழ்க்கையில் இந்த நிலையே காணப்படுகின்றது. தீர்க்கதரிசிகளும் கூட கர்த்தரிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். ஆண்டவரும் இந்த கேள்வியைக் கேட்டார். பூலோகத்தில் வாழுகின்ற ஜனங்களும் கேட்டார்கள். பரலோகத்தில் இருக்கின்ற ஆத்துமாக்களும் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். வேதத்தில் இக்கேள்வி ஒரு பிரதானமான கேள்வியாகவே காணப்படுகிறது.

மரிக்கும்வரை மன்னிப்பு

‘மரிக்கும் வரை மன்னிக்கவேண்டும்’ (லூக்கா 23:34), ‘சிலுவையின் மரணபரியந்தம் நம்மைத் தாழ்த்தவேண்டும்’ (பிலிப்பியர்2:8) என்று மாதிரியாய் இயேசு நமக்குக் காட்டியிருந்தும் பல வேளைகளில் நாம் பொறுமையிழந்து ‘நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? (மத்தேயு 18:21) என்று பேதுருவைப்போலவும், எதுவரையில் நான் தாழ்ந்து போகமுடியும்? என்றும் தேவனிடமே கேள்விகளைக் கேட்கத் துணிந்துவிடுகின்றோம்.

> **நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ.**
> **உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்க முகங்கோணாதே.**
>
> **உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.** மத்தேயு 5:39-44

மேற்கண்ட வேத வசனங்கள் நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் அஸ்திபாரமாகக் காணப்பட்டாலும், பல வேளைகளில், தீமையைச் சகித்துக்கொள்வதும், மறுகன்னத்தைத்

திருப்பிக்கொடுப்பதும் எதுவரைக்கும் என்றும், நமக்கு இடைஞ்சல்கள் செய்பவர்களையும், நம்மை வேதனைப் படுத்துகிறவர்களையும் எதுவரைக்கும் சகித்துப்போகவேண்டும்? எதுவரைக்கும் அவர்களை மன்னிக்கவேண்டும்? நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் எதுவரை ஜெபிக்கவேண்டும்? என்றும் நம்முடைய இருதயத்தில் கேள்விகள் எழும்புகின்றன. மரணமடையும் வரை நம்மிடம் காணப்படவேண்டிய குணங்கள், மனமடிவினால் காணாமல் போய்விடக்கூடாது.

தொடரும் தீமைகளைச் சகிப்பது எதுவரை?

> **கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் *நான் எதுவரைக்கும் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்*, நீர் இரட்சியாமலிருக்கிறீரே! நீர் எனக்கு அக்கிரமத்தைக் காண்பித்து, என்னைத் தீவினையைப் பார்க்கப்பண்ணுகிறதென்ன? கொள்ளையும், கொடுமையும் எனக்கு எதிரே நிற்கிறது; வழக்கையும், வாதையையும் எழுப்புகிறவர்கள் உண்டு.** ஆபகூக் 1 : 2-3

வழக்கும், வாதையும், கொடுமையும், தீவினையும் என்னுடைய ஜீவியத்திலே ஏன் இன்னமும் முடிந்துவிடவில்லை என்று ஒரு மிகப் பெரிய கேள்வியை ஆபகூக் தேவனிடத்திலே கேட்கின்றான். தேவனுடைய கட்டளைகளின்படி ஜெபித்தாலும், வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு ஜெபித்தாலும், கொடுமைகளும், தீவினைகளும், உபத்திரவங்களும் ஆபகூக் தீர்க்கதரிசியினுடைய வாழ்க்கையில் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததால், சோர்வுற்றவனாய் இந்தக் கேள்வியை தேவனிடத்தில் கேட்கின்றான். தன்னைச் சுற்றிலும் தீமைகளும், கொடுமைகளும் தொடர்ந்து நடந்துகொண்டிருந்ததால், தன்னுடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லை என்ற உணர்வும் ஆபகூக்கிற்குள்ளாய் உருவாகத் தொடங்கியது.

> **“எதுவரைக்கும்” என்ற கேள்வி நமக்குள்ளே எழும்பும்போது,**
> **நாம் ஏன் பரிசுத்தமாய் நடக்கவேண்டும்?**
> **என்ற சந்தேகமும் நமக்குள்ளே உருவெடுக்கத் தொடங்கிவிடுகின்றது .**

தீர்க்கதரிசியாகச் சித்தரிக்கப்படுகின்ற ஆசாப்பிற்குள்ளாகவும் இப்படிப்பட்ட கேள்வியே நிறைந்திருந்தது. துன்மார்க்கருடைய வாழ்க்கையில் அநேக இலாபங்களை அவன் கண்டபோது, அவர்களுடைய காரியங்களெல்லாம் நன்மையாகவே நடைபெறுகின்றதைப் பார்த்தபோது, வீம்புக்காரர்களுடைய காரியங்களெல்லாம் வெற்றியாகக்காணப்பட்டபோது, ஆசாப் மனம் தளர்ந்தவனாக, துன்மார்க்கருடைய வாழ்க்கையோடுகூட தனது வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கிவிட்டான். இதுவே ஆசாப்பிற்குள்ளாய் முறுமுறுப்பினை விதைத்தது. துன்மார்க்க்ருடைய பாதையில் நன்மையான மழை, ஆனால், ஜெபித்துக்கொண்டேயிருக்கின்ற, நீதியின் பாதையில் நடக்கின்ற என்னுடைய வாழ்க்கையில் ஏன் இந்த நன்மைகள் கிடைப்பதில்லை? என்று ஆசாப் அங்கலாய்க்கின்றான். எனவேதான் **“நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன். நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும் காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்”** (சங்கீதம் 73: 13,14) என்று புலம்புகிறான்.

நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற, துன்மார்க்கமான வழியில் ஜீவிக்கின்ற மக்களின் வாழ்க்கையோடுகூட நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, நம்முடைய இருதயத்தில் கூட இப்படிப்பட்ட முறுமுறுப்பின் கேள்விகள் எழும்பி நம்மை சோர்வுக்குள்ளாக்கி நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்துவிடும். தேவனைத் தேடாதவர்களின் வாழ்விலெல்லாம் எல்லாக் காரியங்களும் நன்றாக நடந்துகொண்டிருக்கிறது; யார் துன்மார்க்கமாய் ஜீவிக்கின்றார்களோ அவர்கள் வாழ்க்கையில் அனைத்தும் நன்மையாய் நடந்துகொண்டிருக்கிறது; ஆனால் தேவனிடத்திலே முழுவதுமாய் அர்ப்பணித்துவிட்ட என்னுடைய வாழ்க்கையில் மாத்திரம் ஏன் இவைகள் நடப்பதில்லை? என்னுடைய அர்ப்பணிப்பினாலே எனக்கு என்ன இலாபம்? நான் ஏன் என்னை இவ்வளவு சுத்திகரித்து, பரிசுத்தமான பாதையிலே நடக்கவேண்டும்? "எதுவரைக்கும" என்ற கேள்வி நமக்குள்ளே எழும்பும்போது, நாம் ஏன் பரிசுத்தமாய் நடக்கவேண்டும் என்ற சந்தேகமும் நமக்குள்ளே உருவெடுக்கத்தொடங்கிவிடுகின்றது.

பரிசுத்த ஸ்தலமே பதில் பெறும் இடம்

> **நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலைகொண்டிருந்து, அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னைக் கண்டிக்கும்போது என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன்.** ஆபகூக் 2:1

> **இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன்; நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்.** சங்கீதம் 73:17,18

கர்த்தர் காண்கின்ற விதத்தில் ஆபகூக் காணும் வரை "எதுவரை" என்ற கேள்வியையே கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால், கர்த்தர் எனக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்ள, நான் கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்திற்குச் சென்று தரித்திருந்து, காத்திருப்பேன் என்ற அர்ப்பணிப்புக்குள்ளாய் ஆபகூக் கடந்து வந்தபோதோ, பரிசுத்த ஸ்தலத்தில் தேவனிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக்கொண்டான்.

பரிசுத்தப் பர்வதத்திற்குச் சென்றபின்பு ஆபகூக்: **அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவேன்.** ஆபகூக்3:17-18 என்று பாடத் தொடங்கிவிட்டார். ஆசாப் : **எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்; நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.** சங்கீதம் 73:28 என்று களிகூறுகிறார்.

இவர்கள் இருவரும் எப்பொழுது பரிசுத்தப் பர்வதத்திற்குச் சென்றார்களோ, அப்போதுதான் தங்களின் கேள்விகளுக்கு அங்கே பதிலைக் கண்டார்கள். இருவருடைய மனநிலைகளிலும் அங்கேதான் மாறுதல் உண்டானது

துன்மார்க்கர்கள் சறுக்கலான இடங்களிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நாம் கீழே இருக்கும் வரையில் அதனைக் காண்பது அரிது, இயலாதது, நம்முடைய கோணத்தில் நாம் காணும்போது எதுவரை என்று கூச்சலிட்டுக்கொண்டேதானிருப்போம்; ஆனால் எப்போது நாம் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு ஏறிச்சென்று கர்த்தர் பார்க்கின்ற விதமாய் பார்க்கின்றோமோ, அப்பொழுதுதான் அவைகள் நமது கண்களுக்குப் புலப்படத் தொடங்கும். தேவனுடைய பர்வதத்திற்கு ஏறிச்சென்ற பின்பே, என்ன நடந்தாலும் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்ற சந்தோஷம் நமக்குள் உருவாக ஆரம்பிக்கின்றது.

எதுவரைக்கும் நான் நிந்தைகளைச் சகித்துச் செல்லவேண்டும்? எதுவரைக்கும் இந்த வியாதிகளையும் வேதனைகளையும் பொறுக்கவேண்டும்? என்று நாம் கேள்வி கேட்போமானால், கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்திற்குச் செல்வதிலேதான் நமக்கு உத்தரவு உண்டு.

நடப்பதெல்லாம் நன்மைக்கே

சீன தேசத்திலே இருந்த ஒரு ஏழைக் குடும்பத்தில், மகன் ஒன்றரை வயதாயிருக்கும்போது தாய் மரித்துவிட்டபடியினால், தன்னுடைய ஒரே மகனை தானே போஷித்து, காப்பாற்றி வளர்த்துக்கொண்டிருந்தார். குழந்தை பெரியவனானான், குடும்பமோ மிகவும் ஏழ்மையாயிருந்நதது, அவர்களுக்கு இருந்த ஒரே சம்பாத்தியம் அவர்களிடமிருந்த ஒரே ஒரு குதிரைதான். அந்த குதிரையில் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு பொருட்களை ஏற்றிச்சென்று அதில் கிடைக்கும் வருமானத்தில் இவர்கள் பிழைத்துவந்தனர். குதிரைக்கென்று ஒரு வண்டியை வாங்குவதற்குக்கூட அவரிடத்தில் பணமில்லாதிருந்தது. இருப்பினும், இவர்கள் இருவரும் நல்ல விசுவாசிகளாயிருந்தார்கள். உடமைகளோ, பொருளோ இல்லாத நிலையிலும் இவர்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்ததைக் கண்டு, அந்த கிராமத்து ஜனங்கள் இவர்கள்மேல் பொறாமை கொண்டிருந்தார்கள். கிராமத்து ஜனங்கள் இவர்களிடம்: எப்படி எல்லா நிலையிலும் நீங்கள் ஆனந்தமாயிருக்கிறீர்கள்? என்று கேட்டால், தேவன் கொடுத்த சந்தோஷம் எங்கள் உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது என்றே சொல்லிவந்தனர். மகன் பத்தொன்பது வயது வாலிபனானபோது, தகப்பனுக்கு உதவும்படி அவன் குதிரையை எடுத்துச்சென்று வந்தான்.

ஒரு நாள் அந்தக் குதிரை காணாமல்போய்விட்டது. கிராமத்து ஜனங்கள் இவர்களை பரியாசம் பண்ணத் தொடங்கினார்கள். ஆனால் இவர்களோ: தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மையாகவே முடியும் என்று சாந்தமாக பதில் சொல்லிவந்தனர். காணாமல்போன நான்காவது நாளிலே திடீரென்று குதிரை தானாகவே வந்து சேர்ந்தது. ஆனால், மூன்றாவது நாளிலே அந்தக் குதிரையின் மேலேறி மகன் சென்றுகொண்டிருந்தபோது குதிரை அவனைக் கீழே தள்ளி உதைத்ததினால் மகனது தொடை எலும்பு முறிந்துபோனது. இந்தக் காரியத்தினிமித்தம் மீண்டும் கிராமத்து ஜனங்கள் அவர்களை பரியாசம் பண்ணத் தொடங்கினார்கள். ஆனால் அவரோ, என்னுடைய ஆண்டவர் ஒருநாளும் தீமை செய்யமாட்டார், நன்மையையே செய்வார் என்று மாறுத்தரமாகச் சொல்லிவந்தார்.

இந்நிலையில் தீடீரென்று அந்தத் தேசத்திலே போர் மூளத் தொடங்கியது; ‘பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எல்லா வாலிபர்களையும் யுத்தத்திற்கு அனுப்பவேண்டும்’ என்று அத்தேசத்து ராஜா கட்டளை பிறப்பித்தான். எல்லா குடும்பங்களிலுள்ள வாலிபர்களை ராஜாவின் கட்டளையின்படி போர்ச்சேவகர்கள் அழைக்க வந்தபோது, கால் உடைந்துவிட்டபடியினால் இவரது மகனை மட்டும் விட்டுவிட்டு, மற்ற அனைவரையும் அழைத்துச் சென்றுவிட்டார்கள். யுத்தத்திற்குச் சென்ற அத்தனை வாலிபர்களும் யுத்தத்திலேயே மாண்டனர். தேவனை நேசிக்கிற அந்த குடும்பத்திற்கு சகலமும்

நன்மையாகவே நடப்பதைக் கண்ட அக்கிராமத்து ஜனங்கள் அத்தனைபேரும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்.

துக்கத்தின்மேல் துக்கம் வரும்போது "எதுவரைக்கும் ஆண்டவரே" என்று நாம் சத்தமிடுகின்றோம். நம்முடைய கண்ணோட்டத்தில் பார்க்கும் வரை இந்த நிலைதான் நம்முடைய வாழ்க்கையில் தொடரும், நாம் சத்தமிட்டுக்கொண்டேதானிருப்போம், ஆனால், பரிசுத்த பர்வதத்திற்குச் சென்று தேவன் பார்க்கும் கோணத்தில் நாம் இவைகளைப் பார்ப்போமானால், இப்படிப்பட்ட கேள்விகளுக்கு நமக்கு பதில் கிடைத்துவிடும்; நம்முடைய புலம்பல் ஆனந்தமாய் மாறிவிடும்; நம்முடைய அழுகை தேவனைத் துதிக்கும் துதியாக மாறிவிடும். சகலமும் நன்மைக்கு நேராகவே நடப்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும்.

அவசியமான அபிஷேக நிறைவு

> **கர்த்தர் சாமுவேலை நோக்கி: இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு,நான் புறக்கணித்துத் கள்ளின சவுலுக்காக *நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்;* நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக்கொண்டுவா; பெத்லகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்துகொண்டேன் என்றார். அதற்கு சாமுவேல்: நான் எப்படிபபோவேன்; சவுல் இதைக் கேள்விப்பட்டால், என்னைக் கொன்றுபோடுவானே என்றான்; அப்பொழுது கர்த்தர்: நீ ஒரு காளையைக் கையோடே கொண்டுபோய் கர்த்தருக்குப் பலியிட வந்தேன் என்று சொல்லி…** 1 சாமுவேல் 16:1-2

சவுலை தேவன் அரியனையிலிருந்து தள்ளிவிட்டபடியினாலே சாமுவேல் துக்கித்துக்கொண்டிருந்தான். ஏனெனில், கர்த்தரின் கட்டளையின்படி சாமுவேல் சவுலை அபிஷேகம் செய்து ஜனங்கள் மத்தியிலே ராஜாவாக ஏற்படுத்தியிருந்தான். சவுலை தேவன் தள்ளிவிட்டதை சாமுவேலினால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை; துக்கத்தோடுகூட காணப்பட்டான். தேவனோ சாமுவேல் தன்னிடத்தில் வரும்வரை பொறுமையாய் காத்துக்கொண்டிருந்தார். ஆனால் சாமுவேலோ துக்கத்தின்மேல் துக்கமடைந்து அதிலேயே மூழ்கி வரப்போகிற காரியங்களைக் காண மறந்துவிட்டான்.

நம்முடைய துக்கத்தின் காரணங்கள் சரியாக இருந்தபோதிலும்கூட, ஆண்டவர் அந்த துக்கத்திலே நாம் அமிழ்ந்துபோவதை விரும்பவில்லை. சாமுவேலிடம் உன் கொம்பை தைலத்தால் நிறப்பிக்கொண்டுவா என்று அழைக்கிறார். உன்னுடைய அபிஷேகத் தைலத்தைப் பெருக்கிக்கொள். சில காரியங்கள் நமது துக்கத்தை மறக்கவிடுவதில்லை; ஆனால் ஆண்டவரோ, நம்முடைய தைலக்கொம்பை நிறப்பவேண்டுமென விரும்புகின்றார். நம்முடைய பழைய காரியங்களை மறந்துவிட்டு, நடக்கவேண்டியவைகளின்மேல் நமது கண்களைப் பதியவைத்து முன்னேறிச் செல்ல நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அபிஷேகத் தைலத்தைப் பெருக்கவேண்டிய அவசியமுண்டு. சாமுவேல் பயப்பட்டாலும் தேவன் சொன்னதைச் செய்வதற்கு தயாராகிவிட்டான்.

> **அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: *<u>நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்;</u>* பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.**1இராஜாக்கள் 18:21

'கர்த்தரே தெய்வம்' என்று காட்டவேண்டிய சவால் நிறைந்த கட்டத்திற்குள்ளாய் எலியா வந்து நிற்கும்போது, தன்னைச் சுற்றிலும் நிற்கிற ஜனங்களைப் பார்த்து, 'நீங்கள்

எந்தமட்டும் இரண்டு நினைவுகளினால் குந்திக்குந்தி நடப்பீர்கள்' என்று முழக்கமிடுகின்றான். இரண்டு நினைவுகளோடு காணப்பட்ட ஜனங்களை கர்த்தரே தேவன் என்ற ஒரே நிலையான தீர்மானத்திற்குள்ளாகக் கொண்டுவர தேவன் எலியாவின் விண்ணபத்தின்படி வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணினார். இரண்டு நினைவுகளோடு நடப்பவர்களால் காரியங்களைச் சரியாகத் தீர்மானிக்கக் முடியாமல் போய்விடுகிறது. 'இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்'. (யாக்கோபு 1:8). 'இரண்டு எஜமானுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது'. (மத்தேயு 6:24). நம்முடைய வாழ்க்கையிலும் காணப்படுகின்ற இரண்டு நினைவுகள் மாறாத பட்சத்தில், நாமும் சரியான, தெளிவான தீர்மானத்திற்குள்ளாகக் கடந்துவரமுடியாது. இப்படிப்பட்ட நிலை நமது வாழ்க்கையில் மாறவேண்டுமென்றால் பரலோகத்தின் அக்கினி நம்மைச் சந்திக்கவேண்டும். நம்முடைய அபிஷேகத்தின் அளவைப் பெருக்கவேண்டும்.

தொகை நிறைவாகும் வரை

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் *எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்* என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்சகாலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. வெளி 6 : 9 - 11

பரலோகத்திலே பலிபீடத்தினடியில் கேட்கிற 'எதுவரைக்கும்' என்ற சத்தத்திற்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. தேவ வசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொலை செய்யப்பட்ட, இரத்த சாட்சிகளாக மரித்த நீதிமான்களின் "எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர்?" என்ற கேள்விக்கு பதில் சொல்வதோடு மாத்திரமல்லாமல் அந்த தொகையில் பங்குபெறவும் நம்மை ஆயத்தப்படுத்துவோம். கர்த்தருக்காக இரத்தசாட்சியாக மரிப்பது எளிது, ஆனால், இரத்தசாட்சியாக வாழ்வது கடினம். நாம் ஜீவனுள்ள நாளெல்லாம் இரத்தசாட்சிகளாக வாழவேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். தேவப்பணிக்கென்றும், ஆத்தும ஆதாயத்திற்கென்றும் நாம் நமது வாழ்க்கையை அர்ப்பணிப்போம். அழியும் ஆத்துமாக்களை தேவனன்டை கொண்டுவரும் ஆத்தும பாரம் ஒவ்வொரு நாளும் நம்மை நிரப்பட்டும்.